South Eastern University of Sri Lanka
Centre for External Degrees and Professional Learning

**Second Semester Examination in Professional Diploma in Counselling, 2017, 2018**
Held in January 2022

## PDC 1.7 COUNSELLING TREATMENT PLANNING

**(Take-home Examination)**

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்குக.

---

1. பிரியதர்ஷினி 13 வயது பாடசாலை மாணவி, இவரது தந்தை ஐந்து மாதங்களுக்கு முன்னர் திடீர் சுகயீனம் காரணமாக இறந்துவிட்டார், தற்போது தாயுடன் வசிக்கிறார், முன்னர் கல்விச் செயற்பாடுகளில் சிறப்பாக செயல்பட்ட பிரியதர்ஷினிக்கு தற்பொழுது பாடசாலை செல்வதற்கு விருப்பம் குறைவு, பாடசாலை அடைவ மட்டமும் குறைவாக உள்ளது, அடிக்கடி வேகமாக இதயம் துடிப்பதாகவும், தானும் இறந்து விடுவேன் என்று பயப்படுவதாகவும், அப்பாவின் நோய் தனக்கும் ஏற்படுமென பயப்படுவதாகவும் எப்பொழுதும் அம்மாவுக்கு அருகிலேயே இருக்க வேண்டுமென விரும்புவதாகவும் கூறினார்.

   உளவளவாளர் ஆகிய நீங்கள் பிரியதர்ஷினிற்கான சிகிச்சை திட்டத்தினை விபரிக்குக.

2. சுந்தர் கூலித்தொழிலாளி, மனைவி வைத்தியசாலையில் சுத்திகரிப்பு தொழிலாளியாக வேலை செய்கிறார். சுந்தர் சம்பாதிக்கும் பணத்தினை தனது குடிப்பழக்கத்திற்கு செலவிடுவார். வீட்டுச்செலவுக்கு மனைவியின் சம்பாத்தியமே பயன்படுகின்றது. பாடசாலை செல்லும் மூன்று பிள்ளைகள் மூத்த மகன் உயர்தரம் படிக்கிறார், சுந்தர் மூத்த மகனின் ஆடைகள், செருப்பு என்பனவற்றை அணிந்து சென்று விடுவார். இதனால் மகன் வெளியில் செல்ல ஆடைகளுக்கு தட்டுப்பாடு ஏற்படும். சிறிய வீடு, இரண்டு அறைகள் மட்டுமே, சமைத்தல் தொடக்கம் எல்லா தேவைகளும் அதனுள்ளே தீர்க்க வேண்டிய நிலை. சுந்தர் குடிபோதையில் வந்து மனைவியுடன் முரண்படுவது, அடிப்பது பிள்ளைகளுக்கு தகாத வார்த்தைகளை பிரயோகிப்பது என்பன வழமை. ஏனைய குடும்ப அங்கத்தவர்கள் தலையிட்டு மனைவியின் விருப்பப்படி இவரை வீட்டிலிருந்து வெளியேற சொன்னாலும் அதற்கு கட்டுப்பட மாட்டார். அண்மையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு ஈரல் சார்ந்த பிரச்சினைகளுக்காகவும் நீரழிவு நோய்க்காவும் சிகிச்சை பெற்றார். அந்த நேரத்திலும் இவரது குடிப்பழக்கத்திற்குரிய தலையீட்டிற்காக உளநல பிரிவுக்கு அனுப்பப்பட்டிருந்தார்.

   உளவளவாளர் ஆகிய நீங்கள் ரேவ சுந்தரிற்கான சிகிச்சை திட்டத்தினை விபரிக்குக

3. ரேவதி பாடசாலைக்கு செல்லும் 3 பிள்ளைகளுடன் தனியாக வாழும் தாய், வீட்டு வேலைகளுக்கு செல்வார், போதிய அளவு வருமானம் இல்லை, நிதி நிறுவனங்களிலும் ஊரிலும் கடன்பட்டு செலவுகளை சமாளித்தார். கடன் செலுத்த வேண்டிய நிதி நிறுவன பிரதிநிதியும், சுய உதவி குழு அங்கத்தவர்களும் அவரது வீட்டிற்கு வந்து செலுத்த வேண்டிய கடனை கேட்டு அயலவர்களுக்கு தெரியும் படி தகாத வார்த்தைகளால் பேசி விட்டுச் சென்றனர். ரேவதிக்கு அச்சம்பவத்தை மறக்க முடியாமல் உள்ளதோடு இரவில் தூங்கவும் முடியவில்லை, வேலைக்கு செல்வதற்கு விருப்பம் இல்லை, அத்தோடு உடல் சோர்வாக உள்ளது, என்னேரமும் அதே கவலை, பசி இல்லை, தனக்கு உதவி செய்ய யாரும் இல்லை எனவே தான் இறந்தால் பிள்ளைகளை யாராவது கவனிப்பார்கள் எனக் கூறினார். உளவளவாளர் ஆகிய நீங்கள் ரேவதிற்கான சிகிச்சை திட்டத்தினை விபரிக்குக.

4. அஸமத், 18 வயது மாணவன், தேவைக்கு அதிகமாக கை கழுவுவதும் மற்றும் கிருமித்தொற்று ஏற்பட்டுவிடுமோ என்ற அச்சத்தினாலும் இவர் பாதிப்புக்குளாகியிருக்கின்றார். ஆனால், இவை நியாயமற்ற கவலைகள் மற்றும் செற்பாடுகள் என்று விளங்கியிருந்தும் அஸ்மத்தினால் மீளமுடியவில்லை. உளவளத்துணையாளராகிய நீர் இவரை கையாளும் முறை பற்றி விபரிக்குக.

***********************************